1974 சனவரி 28]

ஒன்றியப் பகுதிக்கு, ஏறத்தாழ 41 கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்று திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் இசைவை —அவர்கள் தருகிற திட்டம் என்ற அடிப்படையில்— கோரி அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்கள் 13, 14 தொகுப்புகளில் மூன்று, நான்கு தொகுப்புகளைத்தான் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அப்படி ஏற்றுக்கொள்கிற வேகத்தைப் பொறுத்து இத் திட்டங்களைச் செயல் படுத்தமுடியும்.

நரிக்குடி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

*188 வின—திரு. த. சோணையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங் களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1972-73, 1973-74, ஆகிய வருடங்களில் திட்டங்கள் எதுவும்எடுத்துக் கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : நரிக்குடிப் பகுதி வறட்சிக்கு பெயர்பெற்ற பகுதியாகும். அங்கு தண்ணீர் சமீபத்தில் கூட கிடைப்பதில்லை. அந்த நரிக்குடி ஒன்றியத்தில் தண்ணீர் எடுக்க மூன்று நான்கு மைல்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி மூன்று நான்கு மைல்கள் சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியிருப்பதால் பெண்கள் தலையில் இருக்கிற முடிகள் எல்லாம் உதிர்ந்துபோய் பொட்டல் விழுகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தப் பகுதிக்கு உடனடியாக வருகிற ஆண்டிலாவது அரசு குடிதண்ணீர் வழங்குவது பற்றி ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்திட்டம் மத்திய அரசு ஒத்துக் கொள்கிற அடிப்படையில் மட்டும் நிறைவேற்றப்படுகிற ஒரு திட்டமாக அமைந்து விட்டது. ஆனால் உள்ளாட்சித் துறை மூலம் எந்தெந்தக் கிராமங்கள் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ஒரு தனித் திட்டம் இருக்கிறது. ஒன்றியத்தில் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 20,000 அல்லது 30,000 ரூபாய் செலவிடப் படுகிறது. அத்திட்டத்தின் மூலம் எங்கு மிக நெருக்கடியாக இருக்கிறதோ, எங்கு அதிகமான பாதகம் இருக்கிறதோ, அந்தப் பகுதி கவனிக்கப் படலாம். பரவலாகப் போடுகிற திட்டங்களுக்கு ஏராளமான தொகை

ஒதுக்கப்படுகிற அடிப்படையில்தான் பரவலாக நிறைவேற்ற முடியும். இந்த ஒன்றியத்திற்கு ஏறத்தாழ 38 கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என்ற கருத்துக்கு ஏற்றவாறு மத்திய அரசின் இசைவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மானாமதுரை ஒன்றியத்தில் குடிநீர் வழங்குத் திட்டங்கள்

*189 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வருகிற ஆண்டு நிதிநிலைமை இடம் தருதவற்கேற்ப, மத்திய அரசு இசைவு தருவதற்கேற்ப இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : மானாமதுரை ஒன்றியத்திற்கு குடிதண்ணீருக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒரு கிராமத்துதிற்குச் கூட போதுமானதாக இல்லை. எனவே ஒன்றியத்தின்மூலம் அந்தமாதிரி வேலைகளைப் பூர்த்தி செய்துவிட முடியாது. ஆகவே மத்திய அரசிடம் போய் குடிதண்ணீர் திட்டத்திற்காக தனியாகப் பெற்று வேண்டியதைச் செய்ய நமது அரசு அவர்களை வேண்டிக் கேட்டு உடனடியாக குடிதண்ணீர் திட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைத்தான் நான் முன்னாலே குறிப்பிட்டேன். பெரும் அளவு கடன் உதவி, நிதி உதவி என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட நிதி உதவி வழங்குவதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றின் கொள்கையில் மாற்றம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது. $3\frac{3}{4}$ கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு $1\frac{3}{4}$ கோடி அளவுக்கு மத்திய அரசு இசைவு தந்து இருக்கிறார்கள். தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்ற, நிறைவேற்ற மத்திய அரசு பணம் ஒதுக்குகிறார்கள். இத்திட்டத்தை "ஆக்சிலரேட்டட் ப்ரோக்கிராம்" அடிப்படையில் நிறைவேற்ற முடியும். ஆனால் சில திட்டங்கள் குடி நீர் வாரியத்தின் மூலமாக—அதாவது ஆழக் குழாய் கிணறு அமைப்பது போன்றவற்றிற்கு—எந்த கிராமத்திற்கு எந்த அடிப்படையில் பயன்படுமோ அந்த அடிப்படையில் நிறைவேற்ற, அதை அந்த ஊராட்சித் துறையின் ஒத்துழைப்போடு நிறைவேற்ற, முயற்சிக்கலாம் என்று நான் நம்புகிறேன்.